# கொச்சின் மொத்த காய்கறி வியாபாரியின் வெற்றிக் கதை:



திரு. ஸ்ரீஜித்,
குழிபரம்பில் வீடு,
வடக்கு பொது, பளாரிவட்டம்,
கொச்சின்.
மின்அஞ்சல்:sreejith23@yahoo.co.in
அலைபேசி:9895915110

---

## எனது வியாபார குறிப்பு:

எனது பெயர் ஸ்ரீஜித், 26 வயது, பட்டதாரி, எனக்கு 5 வருட அனுபவம் உள்ளது. கேரளா மாநிலத்தில் எர்ணாகுளத்தில் பேசின் சாலையின் எர்ணாகுளம் சந்தை அமைந்துள்ளது. இது மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் ஆகிய இரண்டையும் கொண்டுள்ளது. எர்ணாகுளம் பேசின் சாலையில் உள்ள எர்ணாகுளம் சந்தை கடை உரிமையாளர்கள் சங்கத்தில் நானும் ஒரு உறுப்பினர். சந்தை நாள் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகள். சந்தையின் வேலை நாள்கள் திங்கள் முதல் சனிக்கிழமை வரை ஞாயிறு விடுமுறை நாள். சந்தையின் வேலை நேரம் காலை 5.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை மொத்த வியாபாரமும் அதற்கு மேல் இரவு 9.00 மணி வரை சில்லறை வியாபாரமும் நடைபெறும். தினசரி சராசரியாக 25 காய்கறி சரக்கு வண்டிகள் (ஒவ்வொரு வண்டியும் சராசரியாக 12 டன்காய்கறிகளை கொண்டிருக்கும்) எர்ணாகுளம் சந்தைக்கு வருகின்றன. கோயமுத்தூர், ஊட்டி, மேட்டுப்பாளையம், மற்றும் சத்தியமங்களம் பகுதியில் காய்கறிகளின் உற்பத்தி குறையும் பொழுது சரக்குகளின் வரத்தும் சில சமயங்களில் குறையலாம். சந்தைகளின் வேலை நாட்களில் சராசரியாக வரும் சரக்குகள் விபரம் மேட்டுப்பாளையம் (6 - 8), ஒட்டன்சத்திரம் (5 - 7), புளியம்பட்டி (4 - 6), ஊட்டி / மைசூர் மற்றும் பெங்களூர் (4 - 7), தக்காளி ஒசூர் / நாச்சி பாளையம் (2 - 3) மற்றும் பெரியவெங்காயம் பூனேவிலிருந்து (2) சரக்கு வரும் நேரம் மற்றும் சரக்குகளை இறக்கும் நேரம் அதிகாலை 2 மணி முதல் காலை 7.00 மணி வரை அதாவது சரக்குகள் வரும் நேரமானது சோதனை சாவடியின் ஒப்புதல் மற்றும் போக்குவரத்து நெரிசல் போன்றவற்றை சார்ந்தது. கட்டமைப்பு வசதிகளை பொருத்தமட்டில் சரியான சாலை வசதி, பாதுகாப்பான இடம், தகவல் தொடர்பு,

போக்குவரத்து, தொழிலாளர்கள் வசதி ஆகியவை உள்ளது. சரக்கு போக்குவரத்து வசதிகளை பொருத்தமட்டில் கனரக வசதிகள், சிறிய சரக்குந்து, சிறிய கனரக வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள் ஆகியவை உள்ளன. வாங்குபவர்களில் சில்லறை வியாபாரிகள், சிறு வணிகர்கள், உணவு விடுதியாளர்கள் மற்றும் பொதுவான நுகர்வோர்கள் ஆகியோர் அடங்குவர்.

**தினசரி சந்தை நிலவரத்தினால் விசாலமான தகவல் தொடர்பு கட்டடைப்பு வசதிகள்:**

நான் சரக்குகளை மேட்டுப்பாளையம், ஒட்டன்சத்திரம், பெங்களூர், ஒசூர், நாச்சிபாளையம் மற்றும் பூனேவில் இருந்து பெறுகிறேன். நான் இந்த இடங்களில் உள்ள கமிஷன் ஏஜென்ட், இடைத்தரகர்கள், பல்வேறு கொள்முதல் மையங்கள் மூலம் சரக்குகளை பெறுகிறேன். ஆனால் தற்பொழுது தினசரி சந்தை நிலவரத்தின் மூலமாக எனக்கு விசாலமான தகவல் தொடர்புகள் உற்பத்தியாளர்கள் மற்றும் வாங்குபவர்களிடமும் ஏற்பட்டுள்ளது. மேலும் எனக்கு பல்வேறு சந்தைகளின் தினசரி சந்தை விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளமுடிகிறது. இன்றைய நாட்களில் எனக்கு பல்வேறு மாநிலங்களிலிருந்து முதன்மை உற்பத்தியாளர்கள் அல்லது விவசாயிகளிடமிருந்து தொலைபேசி அழைப்புகள் வருகின்றது. மேலும் அவர்கள் சரியான விலைக்கு விற்பனை செய்ய தயாராக உள்ளார்கள். இது பரஸ்பரம் அவர்களுக்கும் எனக்கும் நன்மையாக உள்ளது. சில சமயங்களில் சில்லறை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களும் என்னிடம் நேரடி வியாபாரத்திற்கு வருகிறார்கள். சிறந்த தகவல் தொடர்புகள், வேகமான பரிவர்த்தனைக்கு உதவுதல், நேரம் சேமிப்பு, சிறந்த சேவை மற்றும் சரியான விலை ஆகியவைகளை வழங்கும் (DMI) தினசரி சந்தை நிலவரத்திற்கு எனது நன்றி.